# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 81 | 4 Pages | 23.10.2023 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 81 | 4 பக்கங்கள் | 23.10.2023 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## ஹமாஸ் விடுவிக்க முயன்ற 2 பணய கைதிகளை ஏற்க இஸ்ரேல் மறுப்பு...? உண்மை நிலவரம் என்ன..?



காசா, அக். 23

இஸ்ரேல் மீது ஹமாஸ் பயங்கரவாத அமைப்பு கடந்த 7ந்தேதி ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது. எல்லைக்குள் புகுந்து தாக்குதலில் ஈடுபட்டதுடன், 210 பேரை பணய கைதிகளாக சிறை பிடித்து சென்றது. இதனை தொடர்ந்து, இஸ்ரேல் அரசும் இதற்கு பதிலடி கொடுத்து வருகிறது. பணய கைதிகளை மீட்கும் முயற்சி நடந்து வருகிறது.

இந்நிலையில், ஹமாஸ் பயங்கரவாதிகள் பணய கைதிகளாக சிறை பிடித்து சென்றவர்களில் அமெரிக்காவின் சிகாகோவை சேர்ந்த ஜூடித் தைரானன் மற்றும் அவருடைய 17 வயது மகள், நடாலி ரானன் ஆகிய 2 பெண்கள் மனிதநேய காரணங்களுக்காக கடந்த வெள்ளி கிழமை விடுவிக்கப்பட்டனர்.

இந்நிலையில், ஹமாஸ் அமைப்பின் செய்தி தொடர்பாளரான அபு உபைடா கூறும்போது, 2 அமெரிக்கர்களுடன் கூடுதலாக 2 பேரை விடுவிக்கதயாராகஇருந்தோம். இதனைகத்தார்நாட்டுக்குதெரிவித்தோம். அமெரிக்கர்களுடன் சேர்ந்து அந்த 2 இரண்டு பேரையும் விடுவிப்பது என்ற நிலைப்பாட்டில் இருந்தோம்.

இதன்படி, ஜூடித் மற்றும் நடாலியை விடுவித்த நடைமுறையை பின்பற்றி அந்த 2 பேரையும் ஞாயிற்று கிழமை (இன்று) விடுவிக்க தயாராக இருந்தோம். ஆனால், அவர்களை ஏற்க இஸ்ரேல் மறுப்பு தெரிவித்து விட்டது என கூறினார்.

எனினும் இதுபற்றி இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில், ஹமாஸ் பயங்கரவாத அமைப்பு பரப்பும் பொய் பிரசாரங்களுக்கு நாங்கள் பதிலளிப்பதில்லை என தெரிவித்து உள்ளது.

கடத்தப்பட்ட மற்றும் காணாமல் போன அனைவரையும் வீட்டுக்கு திரும்பி கொண்டு வருவதற்கான ஒவ்வொரு வழியையும் நாங்கள் தொடர்ந்து மேற்கொள்வோம் என்று அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

## காங்கிரஸ் கட்சியே கர்நாடகாவின் நீரோ குமாரசாமி கடும் தாக்கு

பெங்களூரு, அக். 23

சமீபத்தில் பெங்களூரு சின்னசாமி மைதானத்தில் பாகிஸ்தான், ஆஸ்திரேலியா இடையிலான உலக கோப்பை போட்டி நடந்தது. இதை நேரில் சென்று முதலமைச்சர் சித்தராமையா மற்றும் துணை முதலமைச்சர் டி.கே. சிவக்குமார் ஆகியோர் நேரில் சென்று பார்த்தனர்.

இந்நிலையில், காங்கிரஸ் கட்சியே கர்நாடகாவின் நீரோ என மதசார் பற்ற ஜனதா தள கட்சியின் தலைவர் குமாரசாமி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக குமாரசாமி கூறுகையில், ரோம் நகரம் பற்றி எரிந்து கொண்டிருந்தபோது, நீரோ மன்னன் வயலின் வாசித்துக் கொண்டிருந்தான். அதுபோல், இங்கு மக்கள் சிரமத்தில் உள்ளனர், கர்நாடகாவின் நீரோ கிரிக்கெட் போட்டியை பார்த்துக் கொண்டிருந்தார் என குற்றம்சாட்டினார்.

கர்நாடக மாநிலம் மின்சாரப் பிரச்னையில் சிக்கித் தவித்து வரும் நிலையில், முதல் மந்திரியும், துணை முதல் மந்திரியும் கிரிக்கெட் போட்டியைப் பார்ப்பதில் மும்முரமாக இருந்துள்ளனர் என தெரிவித்தார்.

## வங்கக்கடலில் இறக்கப்பட்ட விண்கலம் இஸ்ரோ அதிகாரிகளிடம் ஒப்படைப்பு



ஆந்திரபிரதேஷ், அக். 23

சிஜஎஸ்எப் பாதுகாப்பு மூலம் துறைமுகத்தில் இருந்து ஸ்ரீஹரிகோட்டா ஏவு தளத்துக்கு எடுத்துச் சென்றனர்.

அமெரிக்கா, ரஷியா, சீனா ஆகிய நாடுகள் மனிதர்களை விண்ணுக்கு அனுப்பி பல்வேறு விதமான ஆய்வுகளை செய்து வருகின்றன.

விண்வெளி ஆய்வில் வியக்க வைக்கும் பல்வேறு சாதனைகளை படைத்துள்ள இந்தியா இதுவரை மனிதர்களை ராக்கெட் மூலம் விண்ணுக்கு அனுப்பவில்லை. எனவே மனிதர்களை விண்ணுக்கு அனுப்பும் திட்டத்தை இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் (இஸ்ரோ) விஞ்ஞானிகள் கனவு திட்டமாக வைத்திருந்தனர்.

இந்த திட்டத்தை செயல்படுத்த ககன்யான் என்ற விண்கலம் உருவாக்கப்படுகிறது. இந்த கனவு திட்டத்தை இன்னும் 2 ஆண்டுகளில், அதாவது 2025ம் ஆண்டு செயல்படுத்த இஸ்ரோ விஞ்ஞானிகள் முடிவு செய்துள்ளனர். அதற்கு முன்னதாக, 3 கட்டங்களாக ககன்யான் விண்கலம் போன்று மாதிரி விண்கலத்தை வைத்து சோதனை நடத்த இஸ்ரோ விஞ்ஞானிகள் திட்டமிட்டனர்.

ராக்கெட் விண்ணில் ஏவப்படும்போது ஏதாவது தொழில்நுட்பகோளாறு ஏற்பட்டால் விண்வெளி வீரர்கள் தப்பிப்பதற்காக "க்ரூ எஸ்கேப் சிஸ்டம்" என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அந்த அமைப்பில் உள்ள பாரா சூட்டுகள் மூலம் பூமியிலோ அல்லது கடலிலோ விண்வெளி வீரர்கள் தரை இறங்கி தப்ப முடியும். அதன்படி இந்த முதல் கட்ட சோதனை நேற்று வெற்றிகரமாக நடந்தது.

திட்டமிட்டபடி, குறிப்பிட்ட நேரத்தில் பாராசூட்டுகளுடன் மாதிரி விண்கலம் வங்கக்கடலில் இறங்கியது.

இந்நிலையில், சோதனை முறையில் விண்ணில் ஏவ அனுப்பப்பட்ட ககன்யான் விண்கலம், பாராசூட் மூலம் வங்கக்கடலில் இறக்கப்பட்டதை இந்திய கடற்படையினர் மீட்டு, சென்னை துறைமுகத்திற்குக் கொண்டு வந்து இஸ்ரோ அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

4 டன் எடை கொண்ட விண்கலத்தை கண்டெய்னர் வாகனத்தில் ஏற்றி சிஜஎஸ்எப் பாதுகாப்பு மூலம் துறைமுகத்தில் இருந்து ஸ்ரீஹரிகோட்டா ஏவுதளத்துக்கு எடுத்துச் சென்றனர்.

# முத்தூர் – காங்கயம் காவிரி கூட்டு குடிநீர் திட்ட மேம்பாட்டு பணி: அமைச்சர் ஆய்வு



காங்கயம், அக்.22

ஈரோடு மாவட்டம், கொடுமுடியில் இருந்து காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு முத்தூர் காங்கயம் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கொடுமுடியில் தலைமை நீரேற்று நிலையம், அருகில் இச்சிப்பாளையம் சுத்திகரிப்பு நிலையம், அடுத்து திருப்பூர் மாவட்டம் காங்கயம் வட்டத்தில் மேட்டுக்கடை, வாலிபனங்காடு, பச்சாபாளையம் நீருந்து நிலையங்கள், காங்கயம் அய்யாசாமி நகர் காலனி நீர் விஸ்தரிப்பு நிலையம் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

1998 ம் ஆண்டு பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டு, 2013 ல் விரிவாக்கம் செய்யப்பட்ட இத்திட்டம் மூலம் திருப்பூர் மாவட்டத்தில் 3 நகராட்சிகள், 6 பேரூராட்சிகள் மற்றும் 1,790 ஊரக குடியிருப்புப் பகுதிகளுக்கு தினசரி 40.45 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட வேண்டும். 25 ஆண்டுகள் பயன்பாட்டில் உள்ள இத்திட்ட கான்கிரீட் குழாய்களில் தொடர்ந்து நீர்க்கசிவு ஏற்படுவதால் நிர்ணயிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்ய முடியவில்லை.

இதையடுத்து ரூ. 62.29 கோடி மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகள் தொடங்கி தற்போது 36 சதவீதப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. இந்நிலையில் இப்பணிகளின் அனைத்து நிலைகளையும் அமைச்சர் மு.பெ. சாமிநாதன் பார்வையிட்டு, அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி பணிகளை விரைந்து முடிக்க கேட்டுக் கொண்டார்.

திருப்பூர் மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைமைப் பொறியாளர் செல்லமுத்து, மேற்பார்வைப் பொறியாளர் மதியழகன், நிர்வாகப் பொறியாளர் கண்ணன், உதவி செயற்பொறியாளர் கிருஷ்ணமூர்த்தி, உதவிப் பொறியாளர் ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# முத்தூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் தேங்காய் பருப்புக்கு கூடுதல் விலை



காங்கயம், அக்.23

திருப்பூர் மாவட்டம் முத்தூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் வாரந்தோறும் சனிக்கிழமை தேங்காய், தேங்காய் பருப்பு, எள் ஆகிய வேளாண் விளை பொருட்களின் ஏலம் நடைபெற்று வருகிறது. நேற்று காலை ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு சுற்றுவட்டார விவசாயிகள் 5 ஆயிரத்து 45 தேங்காய்களை ஏலத்திற்கு கொண்டு வந்திருந்தனர். டெண்டர் முறையில் நடந்த ஏலத்தில் ஒரு கிலோ தேங்காய் அதிகபட்சவிலையாக ரூ.26.20க்கும், குறைந்தபட்ச விலையாக ரூ.18.35க்கும் ஏலம் விடப்பட்டது.

மேலும் 63 தேங்காய் பருப்பு மூட்டைகள் ஏலம் விடப்பட்டதில் ஒரு கிலோ தேங்காய் பருப்பு அதிகபட்ச விலையாக ரூ.84.50க்கும், குறைந்தபட்ச விலையாக என ரூ.60.10க்கும் டெண்டர் முறையில் ஏலம் விடப்பட்டது. ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் கடந்த வாரத்தை விட இந்த வாரம் 2 ஆயிரத்து 52 தேங்காய்களும், 21 தேங்காய் பருப்பு மூட்டைகளும் கூடுதலாக ஏலம் விடப்பட்டது.

இதில் தேங்காய் ஒரு கிலோவிற்கு ரூ.1.40ம், தேங்காய் பருப்பு ஒரு கிலோவிற்கு ரூ.6.85ம் கூடுதலாக விவசாயிகளுக்கு கிடைத்தது. ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் தேங்காய், தேங்காய் பருப்பு 4 டன் அளவில் மொத்தம் ரூ.1 லட்சத்து 92 ஆயிரத்து 65க்கு வேளாண் விளை பொருட்கள் ஏலம் விடப்பட்டது. இந்த ஏலங்களில் திருப்பூர், ஈரோடு, கரூர், திண்டுக்கல் மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள் கலந்து கொண்டனர். இத்தகவலை முத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூட மேற்பார்வையாளர் கே.தங்கவேல் தெரிவித்து உள்ளார்.

# பின்னலாடைகளுக்கான வரி குறைப்பு அதிகரிப்பை திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் வரவேற்கிறது

திருப்பூர், அக்.23

ஏற்றுமதி செய்யப்படும் பின்னலாடைகளுக்கான டியூட்டி டிராபேக்கை உயர்த்தி மத்திய அரசு அறிவித்துள்ளதற்கு திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் வரவேற்பு தெரிவித்துள்ளது.

ஏற்றுமதி வர்த்தகத்தை ஊக்குவிக்கும் வகையிலும், பல்வேறு நிலையில் ஏற்றுமதியார்கள் செலுத்தும் வரியின் செலவை ஈடுகட்டும் வகையிலும் டியூட்டி டிராபேக் போன்ற சலுகையை மத்திய அரசு வழங்கி வருகிறது. ஏற்றுமதி வர்த்தகத்தில் சரக்குகளை வெளிநாடுகளுக்கு அனுப்பிவைத்ததும், ஏற்றுமதியான சரக்குக்கு சுங்கத் துறை டியூட்டி டிராபேக் வழங்கி வருகிறது. இந்நிலையில், பின்னலாடைகளுக்கான டியூட்டி டிராபேக்கை உயர்த்தி வழங்க வேண்டும் என்று திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் நிறுவனத் தலைவர் ஆ.சக்திவேல், தலைவர் கே.எம்.சுப்பிரமணியன் ஆகியோர் வலியுறுத்தி வந்தனர். இதனிடையே, ஏற்றுமதி செய்யப்படும் காட்டன் டிசர்ட்டுகளுக்கு 2.1 சதவீதமாக இருந்த டியூட்டி டிராபேக்கை தற்போது 3.1 சதவீதமாகவும், செயற்கை நூலிழை ஆடை டிசர்ட்டுகளுக்கு 3 சதவீதத்தில் இருந்து 3.5 சதவீதமாகவும், குழந்தைகளுக்கான காட்டன் ஆடைகளுக்கு 2.1 சதவீதத்தில் இருந்து 2.8 சதவீதமாகவும் டிராபேக் சலுகையை உயர்த்தி மத்திய அரசு அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பு வரும் அக்டோபர் 30 ந்தேதி முதல் அமல்படுத்தப்படவுள்ளது.

இது குறித்து திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் கே.எம். சுப்பிரமணியன் கூறியதாவது:

எங்களது கோரிக்கையை பரிசீலித்த மத்திய அரசு டிராபேக் சலுகையை உயர்த்தி வழங்கியுள்ளது வரவேற்கத்தக்கது. இந்த அறிவிப்பு திருப்பூர் ஏற்றுமதியாளர்களை உற்சாகம் அடையச் செய்துள்ளது. இதன் மூலமாக சர்வதேச சந்தையில் நிலவும் போட்டிகளை சமாளிக்க திருப்பூர் ஏற்றுமதியாளர்களுக்கு வாய்ப்பாக அமையும்.

இதற்கு மத்திய அமைச்சர் பியூஷ் கோயல், ஜவுளித் துறை செயலாளர் ரக்ஷனா சா ஆகியோருக்கு நன்றி தெரிவித்து கடிதம் அனுப்பியுள்ளோம் என்றார்.

# வெள்ளகோவிலில் வடமாநில தொழிலாளர்கள் 4 பேர் மீது தாக்குதல்

வெள்ளகோவில், அக். 23

திருப்பூர் மாவட்டம் வெள்ளகோவில் பகுதியில் உள்ள நூல் மில்லில் ஒரிசா மாநிலத்தை சேர்ந்த நிர்மல்தாஸ் (28), பிரஞ்சநாதன்தாஸ் (26), சூர்யா (24), ரஞ்சன் தாஸ் (25) ஆகியோர் கடந்த 12 ஆண்டுகளாக வேலை செய்து வருகின்றனர். இந்நிலையில் கடந்த சில மாதங்களாக ஓலப்பாளையம் அருகே உள்ள ஒரு நூல் மில்லில் இவர்கள் நான்கு பேரும் வேலை செய்து வந்ததாகவும், அப்போது மில்லின் உரிமையாளர் விஸ்வநாதன் மற்றும் அவரது நண்பர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் அடிக்கடி மில்லில் இருந்து பணம் மற்றும் மின் மோட்டார்கள் காணாமல் போவதாக கூறி, இந்த 4 பேரையும் தாக்கியதாக கூறப்படுகிறது. இதில் காயமடைந்த 4 பேரும் திருப்பூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதுகுறித்து வெள்ளகோவில் போலீசார் விசாரிக்கின்றனர்.

## பனியன் தொழிலாளியிடம் பணம் கேட்டு மிரட்டிய 3 வாலிபர்கள் கைது

திருப்பூர், அக். 23

திண்டுக்கல் மாவட்டத்தை சேர்ந்த செல்வராஜ் என்பவரின் மகன் கிறிஸ்டின் ராஜ் (வயது 27). இவர் திருப்பூர் பலவஞ்சிபாளையம் பகுதியில் தங்கியிருந்து அப்பகுதியில் உள்ள பனியன் நிறுவனத்தில் டெய்லராக வேலை பார்த்து வருகிறார். இந்நிலையில் காளி குமாரசாமி கோவில் பின்புறம் செல்போன் பேசிக்கொண்டு நடந்து சென்றார். அப்போது 3 வாலிபர்கள் திடீரென்று அவரை வழிமறித்து பணம் கேட்டு வழிப்பறியில் ஈடுபட்டுள்ளனர். அவர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்ட போது அதில் ஒருவர் கத்தியை எடுத்து கிறிஸ்டின் ராஜன் கழுத்தில் காயப்படுத்தி விட்டு செல்போனை பறித்துக்கொண்டு 3 பேரும் அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

இது குறித்து வீரபாண்டி குற்றப்பிரிவு போலீஸ் இன்ஸ்பெக்டர் சங்கீதாவிடம் கிறிஸ்டின் ராஜ் புகார் தெரிவித்தார். அதன் அடிப்படையில் போலீசார் தனிப்படை அமைத்து தீவிர விசாரணையில் ஈடுபட்டனர். இது தொடர்பாக திருப்பூர் பலவஞ்சிபாளையம் அடுக்குமாடி குடியிரு ப்போர் பகுதியை சேர்ந்த நிதிஷ்குமார் (19), சூர்யா (19) மற்றும் கவுதம் (22) என்ற 3 வாலிபர்களை போலீசார் பிடித்து விசாரணை மேற்கொண்டனர். விசாரணையில் கிறிஸ்டின் ராஜை வழிமறித்து பணம் கேட்டு மிரட்டியதோடு கத்தியால் காயப்படுத்தி அங்கிருந்து தப்பி சென்றதும் தெரிய வந்தது. இதனைத் தொடர்ந்து வீரபாண்டி போலீசார் 3 பேர் மீதும் வழக்கு பதிவு செய்து அவர்களை கைது செய்தனர்.





# புரட்டாசி மாதம் நிறைவு: மீன் வாங்க குவிந்த அசைவ பிரியர்கள்..!



சென்னை, அக். 23 விரதத்துக்கு பெயர் போனபுரட்டாசிமாதத்தில் பெரும்பாலான அசைவ பிரியர்கள்தங்கள்வாய்க்கு பூட்டு போட்டிருந்தனர். இந்த நிலையில் புரட்டாசி மாதம் முடிந்து முதல் திங்கட்கிழமை இன்று என்பதால் சென்னை காசிமேட்டில் மீன்வாங்க ஏராளமான பொதுமக்கள் குவிந்தனர். அதிகாலை முதலே வியாபாரிகள், பொதுமக்கள்திரண்டதால் காசிமேட்டில் கடும் கூட்டம் காணப்பட்டது. அவர்கள் தாங்கள் விரும்பிய மீன்களை போட்டி போட்டு வாங்கி சென்றனர்.

அதைபோல கடலூர், தூத்துக்குடி, புதுக்கோட்டை, நாகை, கன்னியாகுமரி உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள மீன் மார்க்கெட்டுகளில் மீன் வாங்க பொதுமக்கள் குவிந்தனர். மீன் பிரியர்களின் படையெடுப்பால் காசிமேடு மீன்பிடி துறைமுகம் களை கட்டியது. இதனால் மீன் வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்தனர். வரும் நாட்களில் மீன்கள் விலை மேலும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# 9 துறைமுகங்களில் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்ற அறிவுறுத்தல்



சென்னை, அக்.23 தென்கிழக்கு மற்றும் அதனை ஒட்டிய தென் மேற்கு அரபிக்கடல் பகுதிகளில், கடந்த 19ம் தேதி காலை நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி, அன்றய நாள் நள்ளிரவிலேயே ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக தென்மேற்கு அரபிக்கடல் பகுதிகளில் நிலவியது. இது மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து, தென்மேற்கு அரபி கடல் பகுதிகளில் புயலாக உருவெடுத்தது. தென்மேற்கு அரபி கடலில் உருவாகியுள்ள இந்த புயலுக்கு 'தேஜ்' என பெயரிடப்பட்டு உள்ளது.

இந்த நிலையில், நேற்றிரவு 11.30 மணியளவில் 'தேஜ்' அதிதீவிர புயலாக வலுப்பெற்று, தென் மேற்கு அரபி கடலில், சகோத்ரா (ஏமன்) நகருக்கு 330 கி.மீ. கிழக்குதென்கிழக்கேயும், சலாலா (ஓமன்) நகருக்கு 690 கி.மீ. தெற்குதென்கிழக்கேயும் மற்றும் அல் கைடா (ஏமன்) நகருக்கு 720 கி.மீ. தென்கிழக்கேயும் மையம் கொண்டுள்ளது. அடுத்த 24 மணிநேரத்தில் புயல் அதிக வலுப்பெறும். இன்று மதியம் புயல் இன்னும் அதிக வலுப்பெற கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

இந்நிலையில், அரபிக்கடலில் புயல் உருவானதை குறிக்கும் வகையில் சென்னை, கடலூர், தூத்துக்குடி, எண்ணூர், காட்டுப்பள்ளி, நாகை, புதுச்சேரி, காரைக்கால், பாம்பன் ஆகிய 9 துறைமுகங்களில் 1ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்ற வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தி உள்ளது.

# போலீசாருக்கு மருத்துவ முதலுதவி சிகிச்சை பயிற்சி



பல்லடம், அக். 23 இந்திய மருத்துவ சங்கம், திருப்பூர் டெக்ஸ் சிட்டி கிளை, திருப்பூர் மாவட்ட காவல்துறை இணைந்து நடத்திய போலீசாருக்கான மருத்துவ முதலுதவி சிகிச்சை பயிற்சி முகாம் பல்லடம் வனாலயத்தில் நடைபெற்றது. இந்திய மருத்துவ சங்கம் டெக்ஸ் சிட்டி கிளை தலைவர் டாக்டர் ஏஜாஸ் அன்சாரி தலைமை வகித்தார். திருப்பூர் மாவட்ட போலீஸ் கூடுதல் சூப்பிரண்ட் கிருஷ்ணமூர்த்தி, பல்லடம் துணை போலீஸ் சூப்பிரண்ட் சவுமியா,மருத்துவ சங்கப் பொருளாளர் டாக்டர். சுந்தரமூர்த்தி, மருத்துவ சங்க தேசிய செயற்குழு உறுப்பினர் டாக்டர். ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மருத்துவ சங்க செயலாளர் டாக்டர் கார்த்திகேயன் வரவேற்றார். திருப்பூர் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சாமிநாதன் இந்த பயிற்சி முகாமை துவக்கி வைத்து பேசுகையில்: எங்கு விபத்துக்கள் ஏற்பட்டாலும் முதலில் அழைப்பது போலீசாரைத்தான். எனவே போலீசார் முறையான முதலுதவி சிகிச்சையை தெரிந்து வைத்துக் கொண்டால் பல உயிர்களை காப்பாற்ற முடியும். அதற்காகத்தான் இந்த பயிற்சி முகாம் நடத்தப்படுகிறது. விபத்து ஏற்பட்ட இடத்தில் பாதிக்கப்பட்டவர்களை கையாளும் முறை, அவர்களுக்கு அளிக்க வேண்டிய உடனடி முதலுதவி சிகிச்சை ஆகியவற்றை, இது குறித்து பயிற்சி பெற்ற போலீசார் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளித்தால், பின்னர் அவர்களை மருத்துவமனைக்கு கொண்டு சென்ற பின்பு எளிதில் குணம் அடைய வாய்ப்புகள் அதிகம்.

எனவே போலீசார் முதலுதவி சிகிச்சை குறித்த பயிற்சியை அறிந்து கொள்வது அவசியமாகிறது. இவ்வாறு அவர் பேசினார்.இந்த பயிற்சி முகாமில் டாக்டர்கள் முதலுதவி சிகிச்சை குறித்த செயல்முறைவிளக்கத்தை செய்து காண்பித்தனர். விபத்து ஏற்பட்டு கை, கால் முறிவு, மரண தருவாயில் உள்ளவரை காப்பாற்றுவது, பெரிய விபத்துக்களில் இருந்து மீட்பது, தீ விபத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்வது, பின்னர் சிகிச்சை முறை அளிப்பது குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.பின்னர் முதலுதவி சிகிச்சை பயிற்சி பெற்ற போலீசாருக்கு சான்றிதழ்களை போலீஸ் சூப்பிரண்டு சாமிநாதன் வழங்கினார் இந்த நிகழ்ச்சியில் பல்லடம் போலீஸ் இன்ஸ்பெக்டர் மணிகண்டன், டாக்டர்.பாலமுரளி,டாக்டர்.பிரபலதாமற்றும் மருத்துவ சங்கத்தைச் சேர்ந்த டாக்டர்கள், போலீசார் கலந்து கொண்டனர்.

# திருப்பூர் காந்திநகர் ஏ.வி.பி. பள்ளியில் பள்ளிகளுக்கு இடையேயான இறகுப்பந்து போட்டி




திருப்பூர், அக். 23 திருப்பூர் காந்திநகர் பகுதியில் உள்ள ஏ.வி.பி. டிரஸ்ட் பப்ளிக் சீனியர் செகண்டரி பள்ளியில் திருப்பூர் சகோதயா கூட்டமைப்பு பள்ளிகளுக்கு இடையேயான இறகுப்பந்து போட்டி நடைபெற்றது. திருப்பூர் சகோதயா கூட்டமைப்பில் உள்ள 23க்கும் அதிகமான சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் இருந்து 250க்கும் அதிகமான மாணவர்கள் கலந்து கொண்டனர். 12 வயதுக்குட்பட்டோருக்கான பெண்கள் இரட்டையர் பிரிவில் வர்ண்காஸ்ரீ, மகிமிதா ஜோடி முதலிடம் பெற்றனர். 14 வயதுக்குட்பட்டோருக்கான ஆண்கள் இரட்டையர் பிரிவில் ரித்விக், கிருத்திக் பிரணவ் ஜோடி முதலிடம் பெற்றனர்.

14 வயதுக்குட்பட்டோருக்கான பெண்கள் இரட்டையர் பிரிவில் ஐஸ்வர்ய லட்சுமி, ஸ்வேதா ஜோடி முதலிடம் பெற்றனர். ஆண்கள் ஒற்றையர் பிரிவில் மாணவன் ரித்விக் முதலிடம் பெற்றார். 16 வயதுக்குட்பட்டோருக்கான ஆண்கள் ஒற்றையர் பிரிவில் மாணவன் கவுஷிக் குகன் 2ம் இடம் பெற்றார்.

முன்னதாக தொடக்க விழாவுக்கு ஏ.வி.பி.பள்ளி தாளாளர் கார்த்திகேயன் அருள்ஜோதி தலைமை தாங்கி பேசினார். முதல்வர் பிரமோதினி வரவேற்றார். மாநகராட்சி கமிஷனர் ஜி.பவன்குமார், திருப்பூர் யூரோலைன் ஏற்றுமதி நிறுவன மேலாண்மை இயக்குனர் மெய்நம்பி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர். வெற்றிபெற்ற மாணவர்களை பள்ளியின் தாளாளர் கார்த்திகேயன் அருள் ஜோதி, பொருளாளர் லதா கார்த்திகேயன், முதல்வர் பிரமோதினி, ஒருங்கிணைப்பாளர் வி.மோகனா, பயிற்சியாளர் மற்றும் ஆசிரியர்கள் பாராட்டினர். மாலையில் பரிசளிப்புவிழா நடைபெற்றது. இதில் திருப்பூர் வடக்கு சட்டமன்ற தொகுதி கே. என்.விஜயகுமார் எம்.எல்.ஏ, ஸ்ரீமுருகன் நிட்ஸ் ஏற்றுமதி நிறுவன தலைவரும் முன்னாள் திருப்பூர் மாமன்ற உறுப்பினருமான பாலசுப்பிரமணியம் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார்கள். உடற்கல்வி ஆசிரியர் ஞானசுந்தரி நன்றி கூறினார். நிகழ்ச்சி ஏற்பாடுகளை பள்ளி ஆசிரியர்கள் செய்திருந்தனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# ஆயுத பூஜை பொருட்கள் வாங்க பொதுமக்கள் கடை வீதிகள் மார்க்கெட்டுகள் : போலீசார் தீவிர கண்காணிப்பு



திருப்பூர், அக். 23 ஆயுத பூஜை பண்டிகை இன்று (திங்கட்கிழமை) கொண்டாடப்படும் நிலையில் திருப்பூர் மற்றும் மாவட்டத்திற்குட்பட்ட பல்லடம், உடுமலை, தாராபுரம், காங்கயம், வெள்ளகோவில் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மார்க்கெட் மற்றும் கடை வீதிகளில் பூஜைப்பொருட்கள் வாங்க பொதுமக்கள் கூட்டம் அலைமோதியது.

திருப்பூர் பெருமாள் கோவில் அருகில் உள்ள பூ மார்க்கெட்டில் கடந்த 2 நாட்களாகவே பூக்கள் வியாபாரம் சூடுபிடித்தது. இன்று காலை முதல் பூக்கள் வாங்குவதற்கு மக்கள் கூட்டம் அலைமோதியது. பூக்களின் விலையும் அதிகமாக இருந்தது. இதே போல்பெருமாள்கோவில் வீதி, பல்லடம் ரோடு, தாராபுரம் ரோடு உள்பட மாநகரின் பல இடங்களில் சாலையோரத்தில் பொரி, கடலை, பூஜை பொருட்கள், வாழைக்கன்றுகள், அலங்கார பொருட்கள், மாவிலை, குருத்தோலை தோரணம், தேங்காய், பூசணிக்காய், பூ மாலைகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள்விற்பனைக்கு குவித்து வைக்கப்பட்டிருந்தன. இவற்றை பொது மக்கள் மற்றும் வியாபாரிகள் ஆர்வத்துடன் வாங்கி சென்றனர். பனியன் நிறுவனத்தினர் வாழைக்கன்றுகள், அலங்கார பொருட்கள், மற்றும் பூக்களை மொத்தமாக வாங்கி சென்றனர். கடை வீதிகளுக்கு மக்கள் அதிக அளவில் வந்ததால் மாநகரில் வாகனப்போக்குவரத்து அதிகமாக காணப்பட்டது. இதேபோல் பழ வகைகளின் விற்பனையும் அதிகமாக இருந்தது. கடைகள் மற்றும் ஆங்காங்கே தள்ளுவண்டிகளில் வாழைப்பழங்கள், ஆப்பிள், ஆரஞ்சு உள்ளிட்ட பழ வகைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன.

ஆயுத பூஜை பண்டிகையை முன்னிட்டு திருப்பூரில் பூ, பழங்கள் மற்றும் பூஜைபொருட்களின் விற்பனை மும்முரமாக நடந்தது. குறிப்பாக பூக்கள் வாங்குவதற்கு மக்கள் அதிக அளவில் வந்தனர். பெருமாள் கோவில் அருகே உள்ள பூ மார்க்கெட்டிற்கு அதிக அளவில் பொதுமக்கள் வந்த நிலையில் அவர்களின் வாகனங்கள் மார்க்கெட்டின் முன்பாக உள்ள ரோட்டில் நிறுத்தப்பட்டிருந்தன.

ஏற்கனவே ரோட்டின் மற்றொரு பக்கத்தில் தள்ளுவண்டிகளில் பழம் மற்றும் பூஜை பொருட்கள் விற்பனை நடந்த நிலையில் இருசக்கர வாகனங்கள் அதிக அளவில் நிறுத்தப்பட்டதால் இந்த ரோட்டில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதனால் வாகன ஓட்டிகள் மிகவும் சிரமப்பட்டனர். மேலும் மார்க்கெட்டிற்கு வந்த பொதுமக்கள் நடந்து செல்வதற்கும் இடமின்றி அவர்களும் பாதிக்கப்பட்டனர்.

இதேபோல் திருப்பூர் பல்லடம் ரோட்டில் அதிக அளவிலான வாகனங்கள் செல்வதால் இப்பகுதியில் வாகனப்போக்குவரத்திற்கு பெரும் இடையூறு ஏற்படுகிறது. குறிப்பாக பண்டிகை நாட்களில் அதிக நெரிசல் ஏற்படுகிறது.

எனவே மேற்கண்ட பகுதிகளில் போக்குவரத்து நெரிசலை தீர்க்க அதிகாரிகள் ஆய்வு செய்து உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஆயுத பூஜை கூட்ட நெரிசலையொட்டி மாவட்டம் முழுவதும் போலீசார் தீவிர கண்காணிப்பு ஈடுபட்டனர்.

# தாளக்கரைமொண்டிபாளையம் பெருமாள் கோவில்களில் புரட்டாசி திருவிழா நிறைவு



அவிநாசி, அக். 23 பழமை வாய்ந்ததும், திருப்பூர் மாவட்டத்திலேயே தனி சன்னிதியாய் நரசிம்மருக்கு இடது புறம் மகாலட்சுமி நின்ற நிலையில் அருள்பாலிக்கும் சிறப்புக்குரியதும், சர்ப்ப விநாயகர் வீற்றிருக்கும் தலமாகவும் தாளக்கரை லட்சுமி நரசிம்மப் பெருமாள் கோவில் விளங்குகிறது. இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் உள்ள இக்கோவிலில் புரட்டாசி திருவிழா செப்டம்பர்23ந்தேதிதொடங்கி 5 வார சனிக்கிழமைகளிலும் ஒவ்வோரு வாரம் அப்பகுதியைச் சுற்றியுள்ள கிராமத்தினர் உபயதாரர்களாக பங்கேற்று சிறப்பு பூஜைகளும், இரவு உற்சவமும் நடைபெற்றது.

இதேபோல மேலத்திருப்பதி எனப் போற்றப்படும், சேவூர் அருகேயுள்ள மொண்டிபாளையம் பெருமாள்கோவிலில் புரட்டாசி திருவிழா செப்டம்பர் 16ந் தேதி சனிக்கிழமை தொடங்கப்பட்டு வாரந்தோறும் சிறப்பு பூஜைகள், ஸ்ரீதேவி, பூதேவி சமேத வெங்கடேசப் பெருமாள் சுவாமி திருவீதி உலா உள்ளிட்டவை நடைபெற்றன.

இந்நிலையில் பிரசித்தி பெற்ற இரு கோவில்களிலும் இந்த வாரம் சனிக்கிழமையுடன் புரட்டாசி திருவிழா நிறைவு பெற்றது.

# திருப்பூர் போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் காவலர் வீரவணக்க நாள் நிகழ்ச்சி



திருப்பூர், அக். 23 இந்தியாவில் ஆண்டுதோறும் அக்டோபர் மாதம் 21ந் தேதி காவலர் வீரவணக்க நாளாக கடைபிடிக்கப்படுகிறது. காவல் துறை, ராணுவம், எல்லை பாதுகாப்பு படை, இந்திய திபெத்எல்லைபாதுகாப்பு படை, மத்திய பாதுகாப்பு படை உள்ளிட்ட பிரிவுகளில் தேசத்தை பாதுகாக்கும் வகையில் வீரமரணம் அடைந்த 254 காவலர்களின் தியாகத்தை நினைவுகூறும் வகையில் திருப்பூர் மாநகர ஆயுதப்படை வளாகத்தில் காவலர் நினைவு தூண் அமைக்கப்பட்டது. திருப்பூர் மாநகர போலீஸ் கமிஷனர் பிரவீன்குமார் அபிநபு தலைமை தாங்கி வீரவணக்கம் செலுத்தினார். திருப்பூர் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சாமிநாதன், போலீஸ் துணை கமிஷனர்கள் அபிஷேக் குப்தா (வடக்கு), வனிதா (தெற்கு), ஆசைத்தம்பி (தலைமையிடம்), மாநகர கூடுதல் துணை கமிஷனர்கள், கூடுதல் போலீஸ் சூப்பிரண்டுகள், உதவி கமிஷனர்கள், போலீஸ் இன்ஸ்பெக்டர்கள், சப்இன்ஸ்பெக்டர்கள், காவலர்கள் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்கள். பணியின்போது வீரமரணம் அடைந்த காவலர்களுக்கு திருப்பூர் மாநகர ஆயுதப்படை காவலர்கள் வானத்தை நோக்கி மூன்று முறை 48 துப்பாக்கி குண்டுகள் முழங்க வீரவணக்கம் செலுத்தினர். வீரவணக்கம் அடைந்த காவலர்களின் பெயர்கள் வாசிக்கப்பட்டு அனைவரும் உறுதிமொழி ஏற்றனர்.

# சுற்றுலா பயணிகள் பிளாஸ்டிக் பொருட்கள்பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்: ஆனைமலை புலிகள் காப்பகம் அறிவிப்பு




உடுமலை, அக். 23 ஆனைமலை புலிகள் காப்பகம் பொள்ளாச்சி வனக்கோட்டத்தில் பொள்ளாச்சி, உலாந்தி, மானாம்பள்ளி, வால்பாறை ஆகிய வனச்சரகங்கள் உள்ளன. இங்கு டாப்சிலிப்பில் யானைகள் முகாம், குரங்கு நீர்வீழ்ச்சி, சிறு குன்றா, அட்டகட்டி காட்சி முனை உள்ளிட்ட பல்வேறு சுற்றுலா தலங்கள் உள்ளன.

இவற்றை சுற்றிப்பார்க்க தமிழகம் மட்டுமல்லாது வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து ஏராளமான சுற்றுலாபயணிகள் வருகின்றனர்.

இதற்கிடையில் சுற்றுலா பயணிகள் தங்குவதற்கு தங்கும் விடுதிகள் கட்டப்பட்டு உள்ளன. இதற்கு ரூ.2 ஆயிரம் முதல் ரூ.5 ஆயிரம் வரை விடுதிக்கு தகுந்தவாறு கட்டணம் வசூலிக்கப்படுகிறது. மேலும் ஆன்லைன் மூலம் முன்பதிவு செய்யப்படுகிறது. நாளை (திங்கட்கிழமை) ஆயுதபூஜை கொண்டாடப்படுவதால் தொடர் விடுமுறை விடப்பட்டு உள்ளது.

பண்டிகை விடுமுறையை கொண்டாடுவதற்கு சுற்றுலா பயணிகள் வனத்துறை தங்கும் விடுதிகளை முன்பதிவு செய்து வருகின்றனர். இதன் காரணமாக இன்று முதல் தொடர்ந்து 3 நாட்களுக்கு அனைத்து தங்கும் விடுதிகளும் முன்பதிவு செய்யப்பட்டு உள்ளன. இதுகுறித்து வனத்துறை அதிகாரிகள் கூறியதாவது:

ஆனைமலை புலிகள் காப்பகம் பொள்ளாச்சி வனக்கோட்டத்தில் டாப்சிலிப், சேத்துமடை, அட்டக்கட்டி, சிறுகுன்றா ஆகிய பகுதிகளில் வனத்துறை தங்கும் விடுதிகள் உள்ளன. இதில் 39 தங்கும் விடுதிகள் தற்போது சுற்றுலா பயணிகள் தங்குவதற்கு பயன்பாட்டில் உள்ளன. இந்த அனைத்து அறைகளும் தொடர்ந்து 3 நாட்களுக்கு முன்பதிவு முடிந்துவிட்டது. மானாம்பள்ளியில் உள்ள தங்கும் விடுதியில் பராமரிப்பு பணிகள் நடைபெறுகிறது.

பணிகள் முடிந்ததும் சுற்றுலா பயணிகள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும். சுற்றுலா பயணிகள் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். மேலும் சுற்றுலா பயணிகள் மதுபாட்டில்கள், பிளாஸ்டிக் பொருட்கள் கொண்டு வருவதை தடுக்க சோதனை சாவடிகளில் சோதனை மேற்கொள்ளப்படும். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

# கலைத்துறையில் சாதனை படைத்த கலைஞர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது: அன்புமணி ராமதாஸ், குஷ்பு வழங்கினர்

சென்னை, அக். 23

கலைத்துறையில் சாதனைபடைத்தவர்களை கௌரவப்படுத்தும் விதமாக ப்ரவோக் கலைத்திருவிழா சென்னை சேத்துப்பட்டில் உள்ள லேடி ஆண்டாள் பள்ளியில் உள்ள சர் முத்தா வெங்கடசுப்பா ராவ் கலையரங்கத்தில் நடைபெற்றது.

இத்திருவிழாவில், கலைத்துறையில் சாதனை படைத்த அலர்மேல் வள்ளி, எஸ்.வி.சேகர், அரவிந்தாக்ஷன், ராதாகிருஷ்ணன் ஸ்தபதி ஆகியோருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பிரபல இசைக்கலைஞர் டி.எம். கிருஷ்ணா சமத்துவம் எனும் தலைப்பில் இசைக்கச்சேரி நடத்தி பார்வையாளர்களை கவர்ந்திழுத்தார்.

நாட்டியக் கலைஞரான பத்மஸ்ரீ லீலா சாம்சன் அகத்தீ எனும் தலைப்பில் நடனவிருந்து படைத்தார். மேலும் ஓ.எஸ் அருணனின் ஸ்பந்தமாத்ரிகா நடன நிகழ்ச்சி, முத்துசாமி தீட்சிதர் உருவாக்கிய குமுதக்ரியாவில் அர்த்தநாரீ



எனும் சிவ பார்வதி நடனம், ரேவதி, மதுவந்தி மற்றும் கல்யாண வசந்தம் ஆகிய ராகங்களில் புகழ்பெற்ற வயலின் இசைக்கலைஞர் மேஸ்ட்ரோ லால்குடி ஜி. ஜெயராமன் இசையமைத்த தில்லானா இசைக்கச்சேரி ஆகியவை பார்வையாளர்களை பரவசப்படுத்தியது.

நிகழ்ச்சியின் முக்கிய நிகழ்வாக, கலை வடிவங்களுக்காக உலக அரங்கில் தனக்கென தனி முத்திரை படைத்த பத்ம பூஷன் அலர்மேல் வள்ளி, கலைமாமணி எஸ்.வி சேகர், கணபூஷணம் வி. ஏ. அரவிந்தாக்ஷன் மற்றும் டி. ராதாகிருஷ்ண ஸ்தபதி ஆகியோருக்கு பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ், சௌமியா அன்புமணி, தேசிய மகளிர் ஆணைய உறுப்பினர் குஷ்பு சுந்தர், சென்னை சூப்பர் கிங்ஸ் தலைமை செயல் அதிகாரி காசி விஸ்வநாதன், தொழிலதிபரும் டோனி அண்டு கை அழகு நிலைய நிறுவனருமான சாம்பால் மற்றும் அஸ்வினி சாம்பால் ஆகியோர் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவித்தனர்.

விருது பெற்றபின் உரையாற்றிய எஸ். வி. சேகர், "கலைத்துறையில் இயங்கிகொண்டு இருக்கும் போதே விருது பெறுவது வரம் என்றும், இயங்கி முடித்த பின் வழங்கினால் அது ஓய்வூதியம். தற்போது வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்றது மகிழ்ச்சி அளிக்கிறது" என்று கூறினார்.

"பல்வேறு வேறுபாடுகள் நிறைந்தது இந்தியா எனவும், அதனை நாம் கட்டிக் காப்பாற்ற வேண்டும்" என்றும் கூறிய அன்புமணி ராமதாஸ், இந்த நிகழ்ச்சியில் "தகுதி உடையவர்களுக்கு விருது வழங்கப்பட்டுள்ளது" என்றார். மேலும், "நவீனத்துவம், முதலாளித்துவம் உள்ளிட்டவற்றை பின்பற்றும் இளைய தலைமுறையினர் நமது கலை, பண்பாடு உள்ளிட்டவற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும்" என்றும் அவர் கூறினார்.

பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த குஷ்பூசுந்தர், "இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டது மிகுந்த மகிழ்ச்சியளிப்பதாகவும், வாழ்நாள் சாதனையாளர் விருது சாதாரண விஷயமல்ல. தலைசிறந்த கலைஞர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர்

# கலைஞரின் வருமுன் காப்போம் மருத்துவ முகாம் அமைச்சர் கயல்விழி செல்வராஜ் தொடங்கி வைத்தார்

தாராபுரம், அக். 23

கலைஞரின் வருமுன் காப்போம் மருத்துவ முகாம் தளவாய்பட்டினம் ஊராட்சிக்கு உட்பட்ட கொண்டரசம் பாளையத்தில் நடைபெற்றது. முகாமுக்கு ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் எஸ்.வி. செந்தில்குமார் தலைமை தாங்கினார். பொன்னாபுரம் வட்டார மருத்துவர் தேன்மொழி வரவேற்றார்.

அப்போது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ் முகாமை தொடங்கி



வைத்து 10 கர்ப்பிணிகளுக்கான ஊட்டசத்து பெட்டகம், மற்றும் மக்களை தேடி மருத்துவத்தில் 10பேருக்கு மருந்து பெட்டகங்களை வழங்கினார்.

மேலும் முகாமில் மருந்து மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டது.

அதில் அங்கன்வாடி மையம் சார்பில் காய்கறிகள் கண்காட்சி மற்றும் ஊட்டச்சத்து மாவில் தயாரிக்கப்பட்ட உணவு பொருட்களை சாப்பிட்டு பார்த்தார். தளவாய் பட்டினம் ஆரம்ப சுகாதார நிலைய டாக்டர்கள் மற்றும் செவிலியர்கள் கொண்ட மருத்துவ குழுவினரால் முகாமில் 300 பெண்கள் உள்பட 750 பேர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டது.

முடிவில் சுகாதார ஆய்வாளர் நவீன் நன்றி கூறினார்.

# செயற்கை முறையில் பழங்களை பழுக்க வைக்கக்கூடாது: உணவு பாதுகாப்புத்துறை அதிகாரி எச்சரிக்கை

திருப்பூர், அக். 23

உணவு பாதுகாப்புத்துறை சார்பில் உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டம் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் குறித்த விழிப்புணர்வு கூட்டம் திருப்பூரில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட உணவு பாதுகாப்புத்துறை நியமன அலுவலர் விஜயலலிதாம்பிகை தலைமை தாங்கி பேசியதாவது:

ஓட்டல் உரிமையாளர்கள் ஆண்டுதோறும் உரிமம் அல்லது பதிவு சான்றை புதுப்பிக்க வேண்டும். தரமான உணவுப்பொருட்கள் மற்றும் உணவுகளையே விற்பனை செய்ய வேண்டும்.

அனைத்து ஓட்டல்கள், உணவுப்பொருட்கள் தயாரிப்பு இடங்களில் உணவு பாதுகாப்பு மேற்பார்வையாளர்கள் பயிற்சி பெற்றவர் பணியில் இருக்க வேண்டும். ஓட்டல்களில் சமையல் அறைகளை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

ஏற்கனவே உபயோகப்படுத்திய சமையல் எண்ணெயை மீண்டும் உபயோகிக்காமல்பயோடீசல் உற்பத்திக்கு விற்பனை செய்ய வேண்டும். உணவுப்பொருட்களில் நிறமி சேர்க்க கூடாது. பழங்களை செயற்கை வகையில் பழுக்க வைக்கக்கூடாது. இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் உணவு பாதுகாப்பு அலுவலர்கள், ஓட்டல் உரிமையாளர்கள் சங்க நிர்வாகிகள், இனிப்பு, காரம் தயாரிப்பாளர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

# இரவு நேரங்களில் வெளியில் நடமாடக்கூடாது: ஒலிபெருக்கி மூலம் வனத்துறை எச்சரிக்கை

தருமபுரி, அக்.23

தருமபுரி மாவட்டம் மாரண்டஅள்ளி அடுத்த சாமனூர், படகாண்டஅள்ளி கிராமத்தில் மலை பகுதியை ஒட்டியுள்ள விவசாய நிலங்களில் ஒரு சிலர் தங்களது குடும்பத்துடன் விவசாயம் செய்து வசித்து வருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த சில மாதங்களாக இரவு நேரங்களில் மர்ம விலங்கு ஒன்று நாய், கோழி, ஆடு போன்ற வளர்ப்பு பிராணிகளை கடித்து சென்று உள்ளது.

இதையடுத்து திடீரென மலை உச்சியில் ஒரு விலங்கு அமர்ந்திருந்ததை அப்பகுதி மக்கள் தங்களது செல்போனில் படம் பிடித்துள்ளனர்.

அதனை உற்று பார்த்த போது அது சிறுத்தை என தெரியவந்துள்ளது.இதனை கண்ட கிராம மக்கள்



அதிர்ச்சி அடைந்தனர்.

பின்னர் பாலக்கோடு வனத்துறையினருக்கு சிறுத்தை நடமாட்டம் இருப்பதும் செல்போனில் பதிவான காட்சிகள் குறித்தும் கிராம மக்கள் தகவல் தெரிவித்தனர். இதனை தொடர்ந்து சாமனூர், படகாண்டஅள்ளி பகுதியை சுற்றி இரவு நேரங்களில் வனத்துறையினர் சுழற்சி முறையில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

சிறுத்தை இரவு நேரங்களில்விவசாயநிலங்களிலும் அதனை சுற்றியுள்ள குடியிருப்புக்களை நோக்கி சிறுத்தை வந்து செல்வதை வனத்துறையினர் கண்டு அறிந்துள்ளனர்.

இதனையடுத்து பாலக்கோடு வனச்சரகர் நடராஜ் தலைமையில் வனத்துறையினர்சிறுத்தைநடமாட்டம் உள்ள பகுதியில் ஒலிபெருக்கி மூலம் எச்சரிக்கை விடுத்து வருகின்றனர்.

இதனால் மக்கள் இரவு நேரங்களில் வெளியில் நடமாட வேண்டாம் எனவும், மேலும் வளர்ப்பு பிராணிகளைபாதுகாப்பாகவைத்து கொள்ள வேண்டும். ஒரு வேளை சிறுத்தையால் கால்நடைகள் உள்ளிட்ட வளர்ப்பு பிராணிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டால் அதற்கு வனத்துறை சார்பில் உரிய இழப்பு வழங்கப்படும். அதே போல் வனவிலங்குகள் அச்சுறுத்துவதாக நினைத்து வனவிலங்கு நடமாட்டம் உள்ள பகுதியில் மின்சாரம்வைப்பது,நாட்டு வெடிகுண்டுகள் வைப்பது போன்ற வனவிலங்குகளை துன்புறுத்துவது மற்றும் பாதிப்பு ஏற்படுத்துவது போன்ற செயல்களில் ஈடுபட வேண்டாம்.

அவ்வாறு ஈடுபடும் நபர்கள் மீது வனவிலங்கு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என வனத்துறையினர் பொதுமக்களுக்கு அறிவுறுத்தி வருகின்றனர்.

# தாராபுரத்தில் கத்தியை காட்டி மிரட்டி கொள்ளை: ஆம்புலன்ஸ் டிரைவர் உள்பட 3 பேர் கைது

தாராபுரம், அக். 23

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் சிவசக்தி காலனி பகுதியை சேர்ந்த பழனிச்சாமி மகன் லிங்கேஸ்வரன். இவர் தனது குடும்பத்துடன் வசித்து வருகிறார். இவரது தாயார் ருக்குமணி, தாராபுரம் பொள்ளாச்சி சாலையில் உள்ள பெஸ்ட் நகர் பகுதியில் கணவர் இறந்த நிலையில் தனியாக வசித்து வருகிறார்.

இந்நிலையில் ருக்குமணிக்கு கடந்த சில நாட்களாக உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் திருப்பூரில் உள்ள தனது மகள் வீட்டில் வசித்து வருகிறார். சிகிச்சைக்காக மகள் வீட்டுக்கு சென்ற நிலையில், மருத்துவ செலவிற்காக பணம் கேட்ட போது ருக்குமணி, தனது வீட்டில் பணம் வைத்திருப்பதாக தெரிவித்துள்ளார். உடனே லிங்கேஸ்வரன், தனது தாயார் வீட்டுக்கு அதிகாலை சுமார் 3 மணி அளவில் சென்றுள்ளார்.

இந்நிலையில் தாயாரின் வீட்டின் முன்பு அடையாளம் தெரியாத நபர்கள் சிலர் நின்று கொண்டிருந்தனர். அப்போது திடீரென லிங்கேஸ்வரனின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி உள்ளனர். மேலும் வீட்டிற்குள் திருட முயற்சி செய்வதற்காக சென்ற தாராபுரம் சங்கர் மில் பகுதியை சேர்ந்த அப்துல் ரகுமான் மற்றும் தாராபுரம் அருகே உள்ள கணபதி பாளையம் பகுதியை சேர்ந்த தினேஷ் குமார் ஆகிய இருவரும் வீட்டின் மதில்சுவர்மீது ஏறி குதித்து வீட்டின் பூட்டை உடைத்துக் கொண்டிருந்ததாக தெரிகிறது.

வெளியே நின்று கொண்டிருந்த குப்பிச்சிபாளையம் பகுதியை சேர்ந்த திருமூர்த்தி, லிங்கேஸ்வரன் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி கொண்டிருந்தார். கத்தியினால் கழுத்தை அறுத்து விடுவதாக மிரட்டியதாக தெரிகிறது.

பின்னர் திருமூர்த்தி மற்றும் அப்துல் ரகுமான், தினேஷ்குமார் ஆகிய மூவரும் லிங்கேஸ்வரனை சரமாரியாக தாக்கிவிட்டு, அவரது பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ஆகியவற்றை பறித்துக் கொண்டு தப்பி சென்றுள்ளனர். உடனே இச்சம்பவம் குறித்து லிங்கேஸ்வரன், தாராபுரம் போலீஸ் நிலையத்திற்கு தகவல் கொடுத்தார்.

அப்போது ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று அப்பகுதியை சுற்றி வளைத்தனர். அங்கு தேடிய போது திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டதாக 3 பேரை கைது செய்தனர். போலீசார் நடத்திய விசாரணையில், அப்துல் ரகுமான் பகலில் ஆம்புலன்ஸ் ஓட்டுனராகவும், இரவில் திருடனாகவும் தனது கூட்டாளிகளுடன் சேர்ந்து தொடர் திருட்டு சம்பவங்களில் ஈடுபட்டு வந்தது தெரியவந்தது.

மேலும் கைது செய்யப்பட்ட 3 பேர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டு, தாராபுரம் குற்றவியல் நீதிபதி பாபு முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர். கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி பணம் பறித்த சம்பவம் தாராபுரம் மற்றும் சுற்று வட்டார பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# கொள்ளையர்களை அரிவாளை கொண்டு விரட்டிய முதியவர்: பெண்ணிடம் நகை பறிக்க முயன்ற 4 பேர் கைது

முத்துப்பேட்டை: அக். 23

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை அடுத்த ஜாம்புவானோடை வடகாடு கிராமத்தை சேர்ந்தவர் ஜெயலட்சுமி (வயது 30). இவரது கணவர் சஞ்சய் காந்தி. இவர் சிங்கப்பூரில் வேலை பார்த்து வருகிறார். இவர்களுக்கு 5 வயதில் ஒரு பெண் குழந்தை உள்ளது. சஞ்சய் காந்தி வெளிநாட்டில் இருப்பதால் ஜெயலட்சுமி குழந்தையை வைத்துக்கொண்டு வீட்டில் தனியாக வசித்து வருகிறார். இவருக்கு துணையாக அவரது மாமனார் வைரக்கண்ணு (82) வந்து தங்குவது வழக்கம்.

இந்நிலையில், நேற்று இரவு வழக்கம்போல் ஜெயலட்சுமி மற்றும் அவரது மாமனார் இருவரும் வீட்டில் டி.வி பார்த்துக் கொண்டு இருந்தனர். அப்போது திடீரென வீட்டின் பின்பக்கம் வழியாக முகமூடி அணிந்த 4 பேர்



கொண்ட மர்மநபர்கள் உள்ளே புகுந்தனர்.

மெதுவாக வீட்டின் உள்ளே வந்து நாற்காலியில் அமர்ந்திருந்த ஜெயலட்சுமியின் கழுத்தில் கத்தி வைத்து அவர் அணிந்திருந்த தங்கநகைகளை பறித்தனர். இதனை கண்ட அவரது மாமனார் வைரக்கண்ணு அதனை தடுக்க முயன்றார். அப்போது மர்மநபர்கள் அவரை அரிவாளால் வெட்ட முயற்சித்தனர். இதனால் ஆத்திரம் அடைந்த வைரக்கண்ணு வீட்டில் இருந்த அரிவாளை எடுத்து கொள்ளையர்களை நோக்கி வீசினார்.

இதனால் பயந்த கொள்ளையர்கள் பெண்ணிடம் இருந்து பறித்த நகைகள் மற்றும் அவர்கள் கொண்டு வந்த பொருட்களை அங்கேயே போட்டுவிட்டு அலறிஅடித்து தப்பி சென்றனர். அலறல் சத்தம் கேட்ட அக்கம் பக்கத்தினர் கொள்ளையர்களை விரட்டி சென்று தேடினர். ஆனால் அவர்கள் அதற்குள் தப்பி விட்டனர்.

இதுகுறித்து தகவலறிந்த முத்துப்பேட்டை துணை போலீஸ் சூப்பிரண்டு (பொறுப்பு) திருவாரூர்சரவணன், முத்துப்பேட்டை இன்ஸ்பெக்டர்(பொறுப்பு) எடையூர் ஆனந்த பத்மநாபன், சப்இன்ஸ்பெக்டர்கள் பாலசுப்பிரமணியன், புஷ்பநாதன் மற்றும் தனிப்படை போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து தீவிர விசாரணை மேற்கொண்டனர்.

மேலும், அப்பகுதியில் உள்ள சி.சி.டி.வி. கேமராவில் பதிவான காட்சிகளை கைப்பற்றி சோதனை செய்தனர். அதன் அடிப்படையில் கொள்ளை முயற்சியில் ஈடுபட்டதாக திருத்துறைப்பூண்டி அடுத்த கச்சனம் அம்மனூர் பகுதியை சேர்ந்த பிரவீன்குமார் (26), அதே பகுதியை சேர்ந்த ராஜேஷ் (22), விளத்தூர் பகுதியை சேர்ந்த கார்த்திக்ராஜா, கச்சனம் பகுதியை சேர்ந்த சினநேசன் (23) ஆகிய 4 பேரையும் போலீசார் கைது செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

வீட்டில் புகுந்த கொள்ளையர்களை துணிச்சலுடன் அரிவாளை கொண்டு விரட்டிய முதியவரின் வீரதீர செயலை கண்டு அனைவரும் வியந்தனர். கொள்ளையர்கள்கைது செய்யப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் ராபி பருவ சாகுபடிக்கு பயிர் காப்பீடு

திருப்பூர், அக். 23

திருப்பூர் மாவட்டத்திற்கு 202324ம் ஆண்டுக்கான பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் ராபி செயல்படுத்த ஒரு காப்பீட்டு நிறுவனத்தை தமிழக அரசு தேர்வு செய்துள்ளது.

ராபி பருவத்தில் நெல்2, மக்காசோளம்3, கொண்டைக்கடலை, நிலக்கடலை மற்றும் சோளம் போன்ற அறிக்கை செய்யப்பட்டு விவசாயிகள் காப்பீடு கட்டணம் செலுத்துவதற்கான காலக்கெடுவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே ராபி பருவத்தில் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகள் தாங்கள் பயிர்க்கடன் பெறும் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் மூலமாகவோ அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகவோ தங்கள் விருப்பத்தின் பேரில் அறிக்கை செய்யப்பட்ட பயிர்களைகாப்பீடு செய்து கொள்ளலாம்.





கடன் பெறா விவசாயிகள் நடப்பு பசலி ஆண்டுக்கான அடங்கலை கிராம நிர்வாக அலுவலரிடம் பெற்று அதனுடன் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், ஆதார் அட்டை நகல் ஆகியவற்றை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளிலோ அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலோ கொடுத்து பதிவு செய்து கொள்ளலாம். விவசாயிகள் இயற்கை சீற்றங்கள் ஏற்படும் முன் இத்திட்டத்தின் மூலம் தங்களது பயிர்களை காப்பீடு செய்து கொள்ளவும். மேலும் விபரங்களுக்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குநரையோ அல்லது வேளாண்மை அலுவலரையோதொடர்பு கொள்ளலாம்.

பயிர் காப்பீடு பீரிமியம் தொகையாக நவம்பர் 15ந் தேதிக்குள் ஏக்கருக்கு நெற்பயிருக்கு ரூ.562.5 தொகையும், நவம்பர் 30ந் தேதிக்குள் மக்காச்சோளத்துக்கு ரூ.535.43 தொகையும், கொண்டக்கடலைக்கு ரூ.210 தொகையும், டிசம்பர் 15ந் தேதிக்குள் சோளத்துக்கு ரூ.46.30 தொகையும், டிசம்பர் 31ந் தேதிக்குள் நிலக்கடலைக்கு ரூ.472.50 தொகை செலுத்தி பயிர் காப்பீடு செய்ய வேண்டும்.

இத்தகவலை மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்.

# நடுக்கடலில் மீனவர்களிடம் கத்திமுனையில் பொருட்களை பறித்த இலங்கை கடல் கொள்ளையர்கள்



வேதாரண்யம்: அக். 23

நாகை மாவட்டம் வேதாரண்யம் அடுத்த ஆறுகாட்டுத்துறையை சேர்ந்தவர் ராமகிருஷ்ணன். இவர் சொந்தமாக பைபர் படகு வைத்துள்ளார். இந்நிலையில் ராமகிருஷ்ணன் மற்றும் அதே பகுதியை சேர்ந்த மதியழகன், குமரவேல், நெடுஞ்செழியன் ஆகிய 4 பேரும் நேற்று நள்ளிரவு கோடியக்கரை தென்கிழக்கே சுமார் 10 கடல் மைல் தூரத்தில் மீன் பிடித்து கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு பைபர் படகில் இலங்கை கடல் கொள்ளையர்கள் வந்தனர். பின்னர் அவர்கள் கத்தி முனையில் மீனவர்களை மிரட்டி படகில் இருந்த மீன்கள், ஜி.பி.எஸ். கருவி, செல்போன்கள் உள்ளிட்ட சுமார் ரூ.50 ஆயிரம் மதிப்புள்ள பொருட்களை கொள்ளையடித்து தப்பி சென்றனர். இந்நிலையில் இன்று காலை ஆறுகாட்டுதுறைக்கு கரைதிரும்பிய மீனவர்கள் இது குறித்து வேதாரண்யம் கடலோர காவல் குழும போலீசாரிடம் புகார் அளித்தனர். அதன்பேரில் இன்ஸ்பெக்டர் ராமலிங்கம் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகிறார். தொடர்ந்து இலங்கை கடல் கொள்ளையர்கள் மீனவர்களை தாக்கி கொள்ளையடித்து செல்லும் சம்பவங்கள் நடந்து வருவதால் மீனவர்கள் அச்சத்தில் உள்ளனர். இதனை தடுக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

# சேலம், ஈரோடு, திருப்பதிக்கு வந்தே பாரத் ரயில் வருகை நேரம் மாற்றம்

திருப்பூர், அக். 23

சென்னை சென்ட்ரல்கோவை வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரெயில் சேலம், ஈரோடு, திருப்பூர் ரெயில் நிலையத்துக்கு வரும் நேரம் மாற்றப்பட்டுள்ளது. அதன்படி இன்று முதல் சேலத்துக்கு மாலை 5.58 மணிக்கு வந்த ரெயில் இனி 5.48 மணிக்கும், ஈரோட்டுக்கு 6.47 மணிக்கு வந்த ரெயில் இனி 6.37 மணிக்கும், திருப்பூருக்கு 7.25 மணிக்கு வந்த ரெயில் இனி 7.18 மணிக்கும் வந்து செல்லும். இந்த தகவலை



சேலம் கோட்ட ரெயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நமது தின கனி

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023
23.10.2023



## ஜூனியர் என்.டி.ஆருக்கு ஆஸ்கார் அகாடமி கவுரவம்...!

தெலுங்கு சினிமாவின் முன்னணி நடிகரான ஜூனியர் என்.டி.ஆர். ராஜமவுலி இயக்கிய 'ஆர்.ஆர்.ஆர்.' படத்தில் நடித்ததன் மூலம் உலகப்புகழ் பெற்றார். தற்போது ஜூனியர் என்.டி.ஆருக்கு புதிய கவுரவம் கிடைத்திருக்கிறது.

உலக அளவில் கலைத்துறையில் சேவை செய்தவர்களை கவுரவித்து வரும் ஆஸ்கார் அகாடமியின் சார்பு அமைப்பான அகாடமி ஆப் மோஷன் பிக்சர்ஸ் அண்ட் ஆர்ட்ஸ் என்ற பிரபல அமைப்பு, தனது புதிய உறுப்பினர் குழுவில் ஜூனியர் என்.டி.ஆர். பெயரை இடம்பெறச் செய்துள்ளது.

இதுகுறித்து அகாடமி ஆப் மோஷன் பிக்சர்ஸ் அண்ட் ஆர்ட்ஸ் அமைப்பு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "திரைத் துறையில் அர்ப்பணிப்பும், சேவையும் செய்து ரசிகர்களை மகிழ்வித்து வரும் கலைஞர்களை இது போலதேர்வு செய்துகவுரவிப்பது எங்களுக்குபெருமை" என்று குறிப்பிடப்பட்டு உள்ளது.

ஜூனியர் என்.டி.ஆருக்கு கிடைத்திருக்கும் இந்த புதிய கவுரவம் அவரது ரசிகர்களுக்கும் மகிழ்ச்சியை அளித்துள்ளது. ஜூனியர் என்.டி.ஆர். தற்போது கொரட்டால சிவா இயக்கும் 'தேவரா' படத்தில் நடித்து வருகிறார். அவருக்கு ஜோடியாக ஜான்வி கபூர் நடிக்கிறார். சயீப் அலிகான் வில்லனாக நடிக்கிறார்.

இதனைத் தொடர்ந்து பிரசாந்த் நீல் இயக்கும் புதிய படத்தில் ஜூனியர் என்.டி.ஆர். நடிக்க உள்ளார்.



## நடிகை சுனைனா ஆஸ்பத்திரியில் அனுமதி: ரசிகர்கள் அதிர்ச்சி...!

'காதலில் விழுந்தேன்' படத்தின் மூலமாக தமிழ் சினிமாவிற்கு அறிமுகமானவர், சுனைனா.

'மாசிலாமணி', 'யாதுமாகி', 'வம்சம்', 'நீர்ப்பறவை', 'சமர்', 'வன்மம்', 'தெறி', 'சில்லு கருப்பட்டி', 'ரெஜினா' உள்ளிட்ட பல படங்களில் நடித்துள்ளார். இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஏராளமான ரசிகர்களை கொண்டுள்ள சுனைனா, அவ்வப்போது ரசிகர்களுடன் கலந்துரையாடுவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளார்.

இந்தநிலையில் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் சுனைனா நேற்று பகிர்ந்துள்ள புகைப்படம் அவரது ரசிகர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. ஆஸ்பத்திரியில் அவர் சிகிச்சை பெறுவது போன்ற புகைப்படம்தான் அதற்கு காரணம்.

தொடர் படப்பிடிப்பில் பங்கேற்று வந்த நிலையில் திடீர் உடல்நலக் குறைவு காரணமாக அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்க ப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

சுனைனா உடல்நலம் தேறி மீண்டு வர வேண்டும் என அவரது ரசிகர்கள் விருப்பம் தெரிவித்து வருகிறார்கள்.



## நடிகர் மகேஷ் பாபுவுடன் நடிக்க ஆசை: நடிகை ரோஜா



தமிழ், தெலுங்கில் முன்னணி கதாநாயகியாக வலம் வந்த ரோஜா, தற்போது ஆந்திராவில் மந்திரியாக இருக்கிறார். ஆனாலும் அவருக்கு சினிமா ஆர்வம் குறையவில்லை.

இதுகுறித்து ரோஜா கூறும்போது, "சினிமாவில் தமிழிலும் சரி, தெலுங்கிலும் சரி இப்போதைய இளம் கதாநாயகர்கள் அனைவரும் மிகவும் திறமையான நடிகர்களாக இருக்கிறார்கள். ஆனாலும் சிலருக்கு நல்ல வாய்ப்புகள் கிடைத்து விடுகிறது. அதை அவர்களும் திறமையாக உபயோகித்துக் கொண்டு முன்னேறுகிறார்கள்.

இந்த தலைமுறை ஹீரோக்களில் யாரும் செய்யாத சாதனையை பிரபாஸ் செய்துள்ளார். 'பாகுபலி 1, 2' படங்களில் நடித்து சரித்திர சாதனை நிகழ்த்தி உள்ளார். 'ஆதி புருஷ்' படத்தில் ராமபிரானாக நடித்துள்ளார்.

சமூக கதைகள், சரித்திர கதைகள், புராண கதைகள், பிக்ஷன் இப்படி வித்தியாசமான கதைகளில் நடித்துக் கொண்டே தனது ஜெனரேஷனில் எந்த ஹீரோவும் செய்யாத சாதனையை அவர் செய்துள்ளார். ஒரு நடிகையாக இதை பார்க்கும்போது பெருமைப்படுகிறேன்.

மீண்டும் நடிக்க விருப்பம் உள்ளது. குறிப்பாக மகேஷ்பாபுவுடன் நடிக்க ஆசை உள்ளது. ஆனால் நிச்சயம் அம்மாவாக நடிக்க மாட்டேன். அக்கா அல்லது அண்ணி போன்ற வாய்ப்பு கிடைத்தால் நிச்சயம் நடிப்பேன்'' என்றார்.

## ஓ.டி.டில் வெளியாகும் சந்திரமுகி2 திரைப்படம்



ரஜினி, ஜோதிகா நடிப்பில் 2005ஆம் ஆண்டு வெளியாகி பெரும் வரவேற்பை பெற்ற படம் 'சந்திரமுகி'. இப்படத்தில்திகில், காமெடி, பாடல்கள், மாஸ், ஆக்ஷன் என அனைத்து அம்சங்களும் ஒருங்கே பெற்று எல்லா தரப்பு ஆடியன்ஸையும் திருப்திப்படுத்தியது.

18 ஆண்டுகளுக்குப் பிறகு அதன் இரண்டாம் பாகமாக 'சந்திரமுகி 2' வெளியாகியது. இப்படத்தில் ராகவா லாரன்ஸ் கதாநாயகனாக நடித்துள்ளார். கங்கனா ரனாவத் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும் வடிவேலு, ராதிகா உள்ளிட்ட பல திரைப்பிரபலங்கள் இதில் நடித்திருக்கின்றனர். படம்ரசிகர்களிடையேகலவையானவிமர்சனத்தைபெற்றிருந்தது.

இந்நிலையில் இந்த படம் ஓ.டி .டி தளத்தில் வெளியாகவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி 'சந்திரமுகி 2' திரைப்படம் வரும் 26ம் தேதி ஓடிடி தளத்தில் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி ஆகிய 5 மொழிகளில் வெளியாகிறது என்று படத்தின் தயாரிப்பு நிறுவனம் அறிவித்துள்ளது.

## சதீஷ் நடித்துள்ள 'வித்தைக்காரன்' படத்தின் முதல் பாடல் வெளியானது..!




இயக்குனர் லோகேஷ் கனகராஜிடம் இணை இயக்குனராக பணியாற்றிய வெங்கி இயக்கத்தில் சதீஷ் நடித்துள்ள திரைப்படம் 'வித்தைக்காரன்'. இதில் கதாநாயகியாக சிம்ரன் குப்தா நடித்துள்ளார். மேலும் ஆனந்தராஜ், ஜான் விஜய், ரமேஷ் திலக், தங்கதுரை, மதுசூதனன் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

இப்படத்தை அருள்நிதி நடிப்பில் வெளியான தேஜாவு படத்தை தயாரித்த வைட் கார்ப்பட் ஃபிலிம்ஸ் சார்பில் கே.விஜய் பாண்டி தயாரித்துள்ளார். இந்த படத்துக்கு வி.பி.ஆர். இசையமைத்துள்ளார். யுவ கார்த்திக் ஒளிப்பதிவு செய்துள்ளார். சமீபத்தில் இந்த படத்தின் டீசர் வெளியாகி கவனம் பெற்றது.

இந்த நிலையில் இந்த படத்தின் முதல் பாடலை படக்குழு வெளியிட்டுள்ளது. 'லைஃப் இஸ் மேஜிக்' என்ற இந்த பாடலை முன்னணி நடிகர்களான விஷால் மற்றும் ஆர்யா இணைந்து வெளியிட்டுள்ளனர். கவிஞர் வைரமுத்து எழுதியுள்ள இந்த பாடலை நரேஷ் ஐயர் பாடியுள்ளார். இந்த பாடல் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

## விக்ரம் நடித்துள்ள 'துருவ நட்சத்திரம்' படத்தின் டிரைலர் வெளியாகும் தேதி அறிவிப்பு

விக்ரம் நடிப்பில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட படம் 'துருவ நட்சத்திரம்'. இந்த படத்தை கவுதம் மேனன் இயக்கியுள்ளார். இந்த படத்தில் கதாநாயகியாக ரிது வர்மா நடித்துள்ளார். இவர்களுடன் பார்த்திபன், ராதிகா சரத்குமார், சிம்ரன் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இப்படத்தின் பணிகள் 2017ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டு 2018ஆம் ஆண்டில் திரைக்கு கொண்டு வர திட்டமிட்டிருந்த நிலையில், சில காரணங்களால் தள்ளிப்போனது. இதையடுத்து சமீபத்தில் இந்த திரைப்படம் வருகிற நவம்பர் 24ம் தேதி வெளியாக உள்ளதாக படக்குழு அறிவித்திருந்தது.

இந்த நிலையில், 'துருவ நட்சத்திரம்' திரைப்படத்தின் புதிய அப்டேட் வெளியாகியுள்ளது. அதன்படி, இந்த படத்தின் புதிய டிரைலர் வருகிற 24ம் தேதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை போஸ்டர் ஒன்றை வெளியிட்டு இயக்குனர் கவுதம் மேனன் தனது சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

## நடிகை கார்த்திகாவுக்கு நிச்சயதார்த்தம்...?



தமிழ் திரையுலகில் 1980களில் முன்னணி கதாநாயகியாக கொடி கட்டி பறந்த ராதாவின் மூத்த மகளும், நடிகையுமான கார்த்திகாவுக்கு திருமணம் முடிவாகி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. கார்த்திகா தமிழில் ஜீவா ஜோடியாக 'கோ' படத்தில் அறிமுகமானார். தொடர்ந்து அருண் விஜய்யுடன் 'வா டீல்' படத்தில் நடித்தார்.

பாரதிராஜா இயக்கிய 'அன்னக்கொடி', ஆர்யா, விஜய்சேதுபதியுடன் 'புறம்போக்கு' என்கிற பொதுவுடமை உள்ளிட்ட படங்களிலும் நடித்துள்ளார். தெலுங்கு, மலையாள படங்களிலும் நடித்து இருக்கிறார்.

இந்த நிலையில் கார்த்திகா தனது சமூக வலைத்தளத்தில் நிச்சயதார்த்த மோதிரம் அணிந்து இளைஞர் ஒருவரை கட்டிப்பிடித்தபடி இருக்கும் புகைப்படத்தை வெளியிட்டு உள்ளார். இதன் மூலம் அவருக்கு நிச்சயதார்த்தம் முடிந்து விட்டதாகவும், விரைவில் திருமணம் நடக்க உள்ளதாகவும் கூறப்படுகிறது.

மாப்பிள்ளை யார் என்ற விவரம் தெரியவில்லை. அதனை விரைவில் அதிகாரப்பூர்வமாக அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## எது செய்தாலும் கொஞ்சம் வித்தியாசமாக செய்ய வேண்டும்: கியாரா அத்வானியின் கதை தேர்வு உத்தி...!



இந்தி திரையுலகில் முன்னணி கதாநாயகியாக இருக்கும் கியாரா அத்வானி தெலுங்கிலும் நடித்துள்ளார். தற்போது ஷங்கர் இயக்கத்தில் தமிழ், தெலுங்கில் தயாராகும் 'கேம் சேஞ்சர்' படத்தில் ராம்சரணுக்கு ஜோடியாக நடித்து வருகிறார். சினிமாவில் 10 ஆண்டுகளை கடந்திருக்கும் கியாரா அத்வானி தன்னுடைய கதை தேர்வு உத்தியை பகிர்ந்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறும்போது, "எனக்காக கதை எழுதி காத்துக்கொண்டு இருப்பவர்களை நினைக்கும்போது என் மனதில் அவ்வளவு ஆனந்தமாக இருக்கும்.

ஆனால் நான் எப்போதுமே கதை தேர்வு விஷயத்தில் மிகவும் கவனமாக இருக்கிறேன். சினிமாவில் நடிப்பது என்பது மிகப்பெரிய விஷயம். எனவே கதைகளை தேர்வு செய்வதில் நான் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கிறேன்.

அது உணர்ச்சிப்பூர்வமான கதையா, இல்லையா? என்பதை முன்னாடியே யோசித்துக்கொள்வேன். ஒரு படத்துக்கு என்னால் பலரின் முதலீடும், உழைப்பும், முயற்சியும் இருக்கும். எனவே எல்லாவற்றையும் கருதிதான் முடிவு எடுக்க வேண்டும்.

எது செய்தாலும் கொஞ்சம் வித்தியாசமாக செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் தான்கதைதேர்வில்முடிவுகளைஎடுக்கிறேன். எனக்கும், எனதுகணவர்சித்தார்த்துக்கும் சினிமாவில் நல்ல பெயர் இருக்கிறது. அதை காப்பாற்றிக்கொள்வதில் கவனம் செலுத்தி வருகிறோம்" என்றார்.

## தமிழிலும் வெளியாகும் மம்முட்டியின் 'பிரமயுகம்' திரைப்படம்..!



மம்முட்டி நடித்துள்ள 'பிரமயுகம்' படமும் மலையாள மொழியில் மட்டுமன்றி தமிழிலும் வெளியாக இருக்கிறது.

இந்தி, தெலுங்கு, மலையாள திரையுலகில் இருக்கும் முன்னணி கதாநாயகர்களின் படங்கள் தமிழ் மொழியிலும் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் வரவேற்பை பெற்று வருகின்றன. இந்த வரிசையில் மலையாள நடிகர் மம்முட்டி நடித்துள்ள 'பிரமயுகம்' படமும் மலையாள மொழியில் மட்டுமன்றி தமிழிலும் வெளியாக இருக்கிறது. மேலும் பல மொழிகளில் வெளியிடவும் திட்டமிட்டுள்ளனர்.

இந்தப்படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து தொழில்நுட்ப பணிகள் நடக்கின்றன. படத்தில் வரும் மம்முட்டியின் தோற்றம் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளது. இந்தப்படத்தை ராகுல் சதாசிவன் டைரக்டு செய்துள்ளார். இதில் அர்ஜுன் அசோகன், சித்தார்த் பரதன், அமல்டாலிஸ் ஆகியோரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். சக்கரவர்த்தி ராமச்சந்திரா மற்றும் எஸ்.சஷிகாந்த் ஆகியோர் தயாரித்துள்ளனர்.

மம்முட்டியின் சமீபத்திய வெளியீடான கண்ணூர் ஸ்க்வாட் வெற்றி பெற்றதால் இந்தப்படத்துக்கும் எதிர்பார்ப்பு ஏற்பட்டு உள்ளது.

## டென்மார்க் ஓபன் பேட்மிண்டன்: அரைஇறுதியில் சிந்து தோல்வி




டென்மார்க் ஓபன் பேட்மிண்டன் போட்டி ஒடென்ஸ் நகரில் நடந்து வருகிறது. இதில் நேற்று நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு அரைஇறுதி ஆட்டம் ஒன்றில் முன்னாள் உலக சாம்பியனும், தரவரிசையில் 12வது இடத்தில் இருப்பவருமான இந்திய வீராங்கனை பி.வி.சிந்து, உலக, ஒலிம்பிக் முன்னாள் சாம்பியனான கரோலினா மரினை (ஸ்பெயின்) சந்தித்தார். 1 மணி 13 நிமிடம் நீடித்த இந்த ஆட்டத்தில் சிந்து 1821, 2119, 721 என்ற செட் கணக்கில் கரோலினா மரினிடம் தோல்வி கண்டு வெளியேறினார். கரோலினா மரினுக்கு எதிராக சிந்து தொடர்ச்சியாக சந்தித்த 5வது தோல்வி இதுவாகும். இந்த ஆட்டத்தில் புள்ளிகள் எடுத்ததும் அளவுக்கு அதிகமாக கத்தியதாக மரினையும், செர்வை எடுக்க விரைவாக தயாராகும்படி சிந்துவையும் நடுவர் மஞ்சள் அட்டை காண்பித்து எச்சரித்தார்.



## ஐ.எஸ்.எல். கால்பந்து: கேரளா பிளாஸ்டர்ஸ்நார்த் ஈஸ்ட் யுனைடெட் ஆட்டம் டிரா

12 அணிகள் இடையிலான 10வது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்து போட்டி இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இந்த தொடரில் கொச்சியில் நடைபெற்ற போட்டியில் கேரளா பிளாஸ்டர்ஸ்நார்த் ஈஸ்ட் யுனைடெட் அணிகள் மோதின.

இந்த போட்டியில் நார்த் ஈஸ்ட் யுனைடெட் அணி சார்பில் நெஸ்டர் அல்பியாச் ஆட்டத்தின் 12வது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். கேரளா பிளாஸ்டர்ஸ் அணி சார்பில் டேனிஷ் பரூக் ஆட்டத்தின் 49வது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார்.

இந்த நிலையில் ஆட்டநேர முடிவில் கேரளா பிளாஸ்டர்ஸ்நார்த் ஈஸ்ட் யுனைடெட் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் 11 என்ற கோல் கணக்கில் டிராவில் முடிந்தது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.